**THE MALAYSIAN THORACIC SOCIETY**

**பத்திரிகை அறிக்கை**

ஆகஸ்ட்-19, 2022

**மலேசியாவில் புகையிலை இல்லாத தலைமுறைகள் அவசியம்**

நாடாளுமன்றத்தில் இரண்டாவது வாசிப்பைத் தொடர்ந்து, எதிர்வரும் ஆகஸ்ட் 19 வெள்ளிக்கிழமை அன்று, சிறப்பு நாடாளுமன்றத் தேர்வுக்குழுவின் முதல் கூட்டம் ஒன்றில், புகையிலை உற்பத்தி மற்றும் புகைத்தல் கட்டுப்பாடு மசோதா-2022 பரிசீலனை செய்யப்பட உள்ளது. எதிர்கால சந்ததியினரிடையே புகையிலை பொருட்கள் மற்றும் அவற்றின் மாற்றீடுகளின் கட்டுப்பாடுகளை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துடன், புகையிலை மற்றும் புகைத்தல் கட்டுப்பாடு மசோதாவில் ஜெனெரேஷனல் எண்ட் கேம் (Generational End Game) முன்மொழியப்பட்டதை மலேசியன் தொராசிக் சொசைட்டி (Malaysian Thoracic Society) ஆதரிக்கிறது.

**புகைப்பிடித்தல் உயிரைக் கொல்லும்**

அதில் எந்தச் சந்தேகமும் இல்லை. மலேசியாவில், புகைப்பிடிப்பதால் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 27 200 பேர் இறப்பதாக மதிப்பீடுகள் காட்டுகின்றது[1]. புகைப்பிடித்தல் 'All-cause mortality' எனப்படும் அனைத்து காரணங்களின் இறப்பு விகிதத்தையும் அதிகரிக்கிறது. மலேசிய மக்களிடையே புகைப்பிடிப்பதனால் ஏற்படும் நோய்களுக்கும், ஊனத்தினால் குறையும் வருட ஆயுள் எண்ணிக்கைக்கும் (disability-adjusted life years) மற்றும் ஆயுள் இழந்த வருட காலத்திற்கும் (years of life lost) முக்கியக் காரணமாக அடையாளம் காணப்பட்டுள்ளது . 2030-ஆம் ஆண்டுக்குள், புகைப்பிடிப்பதனால் ஏற்படும் நோய்கள் மற்றும் மின்னணு சிகரெட்டு அல்லது வேப்பிங் (vaping) பயன்பாடு-தொடர்புடைய நுரையீரல் காயம் (EVALI) நோய்களுக்கான சிகிச்சை செலவீடுகள் தத்தம் RM8.77 பில்லியன் RM369 மில்லியனாக உயரக்கூடும் என கணிக்கப்படுகின்றது.

**புகைப்பிடிப்பவர்கள் இளமையிலே ஆரம்பிக்கின்றனர்**

புகைப்பிடித்தல் நமது சமூகத்தில் பரவலாக உள்ளது மற்றும் இந்தப் பழக்கம் இளமையிலேயே தொடங்குகிறது. 2019 தேசிய சுகாதாரம் மற்றும் நோய் ஆய்வில் (2019 National Health and Morbidity Survey), 15 முதல் 19 வயது வரை உள்ளவர்களில் 11.6 சதவீதம் பேர் புகையிலை பிடிப்பவர்கள் மற்றும் 7.5 சதவீதம் பேர் மின்னணு சிகரெட்டுகளைப் பயன்படுத்துபவர்கள். ஒட்டுமொத்தமாக, இந்த வயதினரில் 15.6 சதவீதம் பேர் புகையிலை பொருட்களைப் பயன்படுத்துகின்றனர்[1]. மேலும் இந்த இடைப்பட்ட காலத்தில், இந்தப் புள்ளிவிவரங்கள் அதிகரித்து இருக்க வாய்ப்புள்ளது.

பரிசீலனை செய்யப்பட்ட மசோதாவின் நோக்கம், 2040-ஆம் ஆண்டுக்குள் மலேசியாவில் புகைப்பிடிப்போரின் எண்ணிக்கை 5 விழுக்காட்டுக்கும் குறைவானதாக மாற்றவும், சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியிலே புகைப்பிடிக்கும் பழக்கத்தை தவிர்க்கவும் மற்றும் புகைப்பிடிக்காதவர்களைப் பாதுகாப்பதாகும்[4].

மலேசியன் தொராசிக் சொசைட்டி (Malaysian Thoracic Society), சமுதாயத்தில் புகைப்பிடிக்கும் பழக்கத்தைக் குறைக்கவும் மற்றும் முறியடிக்கவும் எடுக்கப்படும் எந்த வித முயற்சியையும், எல்லா வித முயற்சியையும்

ஆதரவிக்கிறது. அதிலும், புகைப்பிடிக்கா வழக்கத்தை இளைஞர்கள் மத்தியில் உருவாக்கினால், அதிக மற்றும் நீண்ட கால மாற்றத்தை உருவாக்கும். புகையிலை மற்றும் புகைத்தல் கட்டுப்பாடு மசோதாவில் முன்மொழியப்பட்ட ஜெனெரேஷனல் எண்ட் கேம் (Generational End Game) ஏற்றுக்கொள்ளப்படுவதோடு மட்டுமின்றி விரைவில் அமலாக்கம் செய்யப்பட வேண்டும். இந்த முன்முயற்சியினால் ஏற்படும் நேர்மறையான விளைவுகள் தற்போதைய மக்களின் நலத்தை மட்டுமின்றி, வரும் சந்ததியினரின் நலத்தையும் கருத்தில் கொள்வதால், இதனைப் பரிசீலனை செய்ய நியமிக்கப்பட்டுள்ள தெரிவுக்குழு கால தாமதமின்றி அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**குறிப்புகள்:**


1. Institute for Public Health (IPH), National Institutes of Health, Ministry of Health

Malaysia. 2020. National Health and Morbidity Survey (NHMS) 2019: Vol. I: NCDs – Non Communicable Diseases: Risk Factors and other Health Problems

2. Lim K H, Cheong Y L, Lim H L, et al. Assessment of association between smoking and

all-cause mortality among Malaysian adult population: Findings from a retrospective cohort

study. Tobacco Induced Diseases. 2022;20(May):50. doi:10.18332/tid/147656.

3. Media statement by Minister of Health Malaysia, 27th July 2022.

4. Kementerian Kesihatan Malaysia. Pelan Strategik Kebangsaan bagi Kawalan Tembakau

2015-2020.


இப்படிக்கு :


**President and Executive Committee of the Malaysian Thoracic Society**

Assoc Prof Dr Pang Yong Kek (President)
Assoc Prof Dr Ahmad Izuanuddin Ismail
Dr Hooi Lai Ngoh
Dr Jessie Anne de Bruyne
Dr Lalitha Pereirasamy
Dr Su Siew Choo
Dr Asiah Kassim
Dr Tan Jiunn Liang
Dr Noor Ain Noor Affendi
Dr Nurul Yaqeen Mohd Esa
Professor Dr Roslina Abdul Manap


*The Malaysian Thoracic Society is a professional medical body that represents the respiratory medical fraternity with the objective of advancing knowledge and practice of respiratory medicine in Malaysia.*